அருப்புக்கோட்டையில் 'ஓரணியில் தமிழ்நாடு' வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் கிருத்துவர் வாழும் பகுதியில் நேரில் சென்று உறுப்பினர்கள் சேர்த்தார். உடன் விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.ரமேஷ் முன்னாள் தலைவர் சிவப்பிரகாசம், நகரச் செயலாளர் ஏ.கே.மணி, டேனியல் பிரபாகரன், ஜான்சன், இளைஞர் அணி பாபுஜி, நெசவாளர் அணி பழனிச்சாமி, முன்னாள் சேர்மன் சுப்பாராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.

மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டம், விளாச்சேரி கிராமத்தில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞரால் அமைக்கப்பட்ட தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர் அவர்களின் நினைவு இல்லத்தில் அவரது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு அன்னாரது திருவுருவச் சிலைக்கு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மதுரை மாவட்ட ஆட்சியர் பிரவீன் குமார், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள், அதிகாரிகள் பங்கேற்றனர்.

'ஓரணியில் தமிழ்நாடு' திட்டம் – மக்கள் ஆர்வமாக இருப்பது

வரக்கூடிய தேர்தல் முடிவுகளின் அறிகுறியாக பார்க்கலாம்!

நெல்லையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

நெல்லை.ஜூலை.8- "ஓரணியில் தமிழ்நாடு" என்பதில் மக்கள் ஆர்வமாக இருப்பது வரக்கூடிய தேர்தல் முடிவுகளின் அறிகுறியாக பார்க்கலாம் என்றும் தமிழக வெற்றி கழகம் தனித்துப் போட்டியிடுவது தி.மு.க.விற்கு அது சவாலாக இருக்காது,ஆனால் அ.தி.மு.க.விற்கு அது சவாலாக இருக்கலாம்.என நெல்லை கிழக்கு மாவட்டம் அம்பை தொகுதி சேர் மகாதேவியில் கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் தெரிவித்தார்கள்.

தமிழகம் முழுவதும் "ஓரணியில் தமிழ்நாடு" என்ற திட்டத்தின் கீழ் தி.மு.க விற்கு தீவிர உறுப்பினர் சேர்க்கை தொடங்கப்பட்டு நடந்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக நெல்லை கிழக்கு மாவட்டம் சேரன்மகாதேவியில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்று உறுப்பினர் சேர்க்கை முகாமைத் தொடங்கி வைத்து வீடு,வீடாக சென்று உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டார். மேலும் "ஓரணியில் தமிழ்நாடு" என்ற வாசகம் அடங்கிய ஸ்டிக்கர்களையும் வீடுகளில் ஒட்டினார்.அவரை பெண்கள் மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்றனர்.

பின்னர் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் மீது மிகப்பெரிய நம்பிக்கையோடு "ஓரணியில் தமிழ் நாடு" என்பதில் மக்கள் தங்களை இணைத்துக் கொள்கின்றனர்.தமிழக வெற்றி கழகம் தனித்துப் போட்டியிடுவது தி.மு.க.விற்கு அது சவாலாக இருக்காது.ஆனால் அ.தி.மு.க.விற்கு அது சவாலாக இருக்கலாம்.நிறைய பேர் தனித்து போட்டியிடலாம் அது அவர்கள் தனிப்பட்ட முடிவு.மேலும் தனித்துப் போட்டியிடுவோம் என்று தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் அறிவித்திருப்பதற்கு வாழ்த்துக்கள். ஆனால் வெற்றி என்பது நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணிக்கு தான் என்பது மக்களின் வரவேற்பை பார்க்கும்போது தெளிவாக தெரிகிறது.

தமிழக வெற்றி கழகத்துடன் கூட்டணி இணைய வாய்ப்புள்ளதா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளித்த அவர் தி.மு.க. கூட்டணியில் யாரை சேர்ப்பது என்பது முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்வார்கள்.முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களை ஏற்றுக்கொண்டு வரக்கூடிய யாராக இருந்தாலும் நம்மோடு இணைந்து பணியாற்றலாம்.

பா.ஜ.கவுடன் கூட்டணி கிடையாது என தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் அறிவித்திருப்பது. சில பேர் அதிர்ச்சிக்கு ஆளாகி இருக்கலாம். ஆனால் மக்களுடைய எதிரிகள் யார் என்பதில் மக்கள் தெளிவாக புரிந்து கொண்டிருக்கிறார்கள்.மக்கள் யாரை எப்படி பார்க்கிறார்கள், என்பது தான் முக்கியம்.மக்கள் தி.மு.க.மீதும் முதலமைச்சர் அவர்களின் மீதும் மிகப்பெரிய நம்பிக்கையோடு இருக்கிறார்கள். அதனால் தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய மக்கள் யாரை நம்பிக்கை யோடு எதிர்கொள்கிறார்கள், யாருக்கு தேர்தலில் வாக்களிப்பார் கள் என்பது தான் முக்கியம்.

"ஓரணியில் தமிழ்நாடு" என்பதில் மக்கள் ஆர்வமாக இருப்பது வரக்கூடிய தேர்தல்களின் முடிவுகளின் அறிகுறியாக பார்க்கலாம்.அ.தி.மு.க.வையாரும் கபளிகரம் செய்ய முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி பேசியது குறித்து கேள்விக்கு அவர்களின் பக்கத்தில் இருப்பவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காக அவருக்கே அவர் சொல்லி இருப்பார் என கூறினார்.

இவ்வாறு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் தெரிவித்தார்கள்.

நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன்,சா. ஞானதிரவியம்,ஒன்றிய செயலாளர் கள் பிரபு என்ற முத்துப்பாண்டி, முத்து கிருஷ்ணன், பேரூர் கழக செயலாளர் மணிஷா செல்வராஜ்

மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன், மாவட்ட துணை செயலாளர்கள் தமயந்தி,மைக்கேல் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வசூடாமணி, தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பிரேம் ஆனந்த்,உள்பட கழக நிர்வாகிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

சிவகங்கை மாவட்டத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு' கழக உறுப்பினர் சேர்க்கை!

அமைச்சர்கள் கே ஆர் . பெரிய கருப்பன் – தங்கம் தென்னரசு – தமிழரசி எம்.எல்.ஏ. மற்றும் மு.தென்னவன் பங்கேற்பு!

சிவகங்கை ஜூலை 8- கழகத் தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை கழக உறுப்பினர் சேர்த்தல் கடந்த மூன்றாம் தேதி முதல் மாவட்டங்கள் தோறும் நடைபெற்று வருகிறது. இதில் சிவகங்கை மாவட்டத்தில் கடந்த 3ம் தேதி திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சிங்கம்புணரி தாலுகா அரளிக்கோட்டையில் மாவட்ட கழக செயலாளர்அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் தலைமையில் ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சி வீடு வீடாகச் சென்று துவக்கி வைத்தார். கழக அரசின் நான்கரை ஆண்டு சாதனைகள் ஒன்றிய அரசினால் தமிழகத்திற்கு ஏற்பட்டுள்ள இடையூறுகள் பாரபட்சம் போன்றவற்றை எடுத்துக் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் டாக்டர் எஸ்.சுந்தர்ராஜ், சிங்கம்புனரி தெற்கு ஒன்றிய செயலாளர் கே . பால சுப்பிரமணியன் ஒன்றிய துணைச் செயலாளர் எஸ். முத்துக்குமார் தகவல் தொழில்நுட்ப அணி பணி அமைப்பாளர் காளிமுத்து ஊராட்சி செயலாளர் பில்லப்பன் நிர்வாகிகள் மதியழகன், சதீஷ் ,பாலா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார் ஊராட்சி கழக நிர்வாகிகள் சென்றிருந்தார்கள்.

மானாமதுரை நகர் கழகத்தின் சார்பில் 17 வது வட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் தலைமையில் நகர் கழக செயலாளருமான க.பொன்னுச்சாமி முன்னிலையில் மண்டல பொறுப்பாளரும் நிதிய மைச்சருமான தங்கம் தென்னரசு வீடு வீடாக சென்று ஓரணியில் ,தமிழ் நாடு கழக உறுப்பினர் சேர்த்தல் நிகழ்ச்சியை மக்களிடம் எடுத்துச் கூறி துவக்கி வைத்தார். பொது மக்களிடம் கழக அரசின் நான்கரை ஆண்டு சாதனைகளை எடுத்துக் கூறி ஒன்றிய அரசின் மாநில மக்கள் விரோத போக்கினை எடுத்துக் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல். ஏ மாவட்ட கழகத் துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், முன்னாள் எம்.எல்.ஏ நகர் மன்ற தலைவர் எஸ் .மாரியப்பன் கென்னடி, ஒன்றிய செயலாளர்கள் துரை.ராஜா மணி, அ.முத்துச்சாமி, மா .அண்ணாதுரை,நகர்கழக நிர்வாகிகள் சுரேந்திரன், கார்த்தி, பாஸ்கர் ,அதியமான், 17வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர் சக்தி ஸ்வரன் மற்றும் நகர் கழக நிர்வாகிகள் சென்றிருந்தார்கள்.

சிவகங்கை நகரில் 27வது வார்டில் நகர்கழகச் செயலாளர் நகர்மன்ற தலைவருமான சி.எம். துரை .ஆனந்த் தலைமையில் ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை கழக உறுப்பினர் சேர்த்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் நகர் கழக நிர்வாகிகள் ஜெய காந்தன், ராமதாஸ் ராஜா சர்புதீன் உட்பட நகர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

காரைக்குடி மாநகரில் மாநகர செயலாளர் துணை மேருமான நா.குண சேகரன் தலைமையில் ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை கழக உறுப்பினர் சேர்த்தல் வீடு வீடாகச் சென்று நடைபெற்றது. இதில் நகர் கழக நிர்வாகிகள் சன் சுப்பையா, சொ.கண்ணன் வட்ட பிரதிநிதி ரமேஷ் மற்றும் நிர்வாகிகள் மாநகராட்சி உறுப்பினர்கள் சென்றிருந்தார்கள் . தேவகோட்டை நகர்கழகத்தின் சார்பில் நகர்கழக செயலாளர் பெரி.பாலா தலைமையில் ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை கழக உறுப்பினர் சேர்த்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் நகர் கழக நிர்வாகிகள் அன்புச் செல்வன், இளங்கோ, கருணாநிதி, மற்றும் நகர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

திருப்புவனத்தில் ஒன்றியபேருர் கழகத் தின் சார்பில் மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கைமாறன் தலைமையில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் திருமதி வசந்திசேங்கைமாறன், சுப்பிரமணியன், பேரூர் கழக செயலாளர் நாகூர் கனி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. ஓரணியில். தமிழ்நாடு உறுப்பினர் சேர்த்தல் நிகழ்ச்சி யினை துவக்கி வைத்தார். பேரூர் ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்துகொண்டார்கள் . மானாமதுரை கிழக்கு ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் துரை.ராஜா பணி தலைமையிலும் மானாமதுரை மேற்கு ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் மா. அண்ணாதுரை தலைமையில் தெற்கு ஒன்றியத்தில் அ. முத்துச்சாமி தலைமையிலும், இளையான்குடி வடக்கு ஒன்றியத்தில் முன்னாள் எம்.எல்.ஏ .சுப. மதிய ரசன் தலைமையிலும், பேருர் கழக செயலாளர் பி.ஏ.நஜ்மூதீன் தலைமையிலும், கிழக்கு ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர்வே.தமிழ்மாறன் தலைமையிலும் இளையான்குடி தெற்கு ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் ஆறு.செல்வராஜ் தலைமையிலும் இளையாங்குடி மேற்கு ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் கா. வெங்கட்ராமன் தலைமையிலும்,

காளையார் கோவிலில் கிழக்கு ஒன்றிய செயலாளர் வே.ஆரோக்கியசாமி தலைமையிலும், தெற்கு ஒன்றிய செயலாளர் யோக.கிருஷ்ணகுமார் தலைமையிலும் வடக்கு ஒன்றியத்தில் ஆர்.எம் . கென்னடி தலைமையிலும் தேவகோட்டையில் தெற்கு ஒன்றிய செயலாளர் நாகனி ரவி தலைமையிலும் ,வடக்கு ஒன்றிய செயலாளர் வே.பூபாலசிங்கம் தலைமையிலும், கண்ணங்குடி ஒன்றியத்தில் ஒன்றிய கழக செயலாளர் லெ.மு. ரவிச்சந்திரன் தலைமையிலும், சாக்கோட்டை கிழக்கு ஒன்றிய ம் புதுவயலில் செயலாளர் சுப.சின்னத்துரை தலைமையிலும், மேற்குஒன்றியத்தில் கே. எஸ் ஆனந்த் தலைமையிலும், கல்லல் கிழக்கு ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் நா. நெடுஞ்செழியன் தலைமையிலும் ,மேற்குஒன்றியத்தில் குன்னக்குடி சுப்பிரமணியன் தலைமையிலும்,

திருப்பத்தூரில் வடக்கு ஒன்றிய செயலாளர் விராமதி மாணிக்கம் தலைமையிலும், தெற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.சண்முகவடிவேல் தலைமையிலும்,சிங்கம்புணரி தெற்கில் கே. பாலசுப்பபிரமணியன் தலைமையிலும், வடக்கு ஒன்றியத்தில் பூமிநாதன் தலைமையிலும்,எஸ்.புதூர் பாரிவள்ளல் ஒன்றியத்தில் பி.செல்வராஜ் தலைமையிலும், சிவகங்கை தெற்கு ஒன்றிய த்தில் ஒன்றிய செயலாளர் எம்.ஜெயராமன் தலைமையிலும், வடக்கு ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் திருமலை முத்துராமலிங்கம் தலைமையிலும் மேற்கு ஒன்றியத்தில் பொறுப்பாளர் பெ.மந்தக்காளை தலைமையிலும் ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை புதிய உறுப்பினர்சேர்த்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் அந்தந்த ஒன்றிய பேருர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் . சிங்கம்புணரியில் பேரூர் கழகச் செயலாளர் பி கதிர் வேல் தலைமையிலும், நெற்குப்பையில்பேருர் கழகச் செயலாளர் பேரூராட்சி மன்ற தலைவர் கே. பி. எஸ். பழனியப்பன் தலைமையிலும், திருப்பத்தூரில் பேருர்கழக செயலாளர் ஆர்.கார்த்திகேயன் தலைமையிலும், கோட்டையூரில் ராசு தலைமையிலும், பள்ளத்தூரில் அசோக் தலைமையிலும், நாட்டரசன் கோட்டையில் ஜெயராமன் தலைமையிலும், திருப்பு வனத்தில் நாகூர் கனி தலைமையிலும் ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை கழக உறுப்பினர் சேர்த்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் . மாவட்டம் முழுவதும் ஒன்றிய, பேருர், நகர கழக செயலாளர்கள் ஓரணியில் தமிழ் நாடு கழக உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சியில் வீடு வீடாகச் சென்று தீவிரமாக ஈடுபட்டு உள்ளார்கள்.

கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்கின்றார்! தூத்துக்குடி தெற்கு மாவட்ட

வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA-2) ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

தூத்துக்குடி, ஜூலை. 8- தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.க தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் தளபதியார் ஆலோசனைப்படி ஓரணியில் தமிழ்நாடு எனும் முன்னெடுப்பு நடைபெற்று வருகிறது. அனைத்து வாக்குச்சாவடிகள் வாரியாக மக்களை சந்தித்து அரசின் சாதனைகளை விளக்கி சொல்வதோடு தி.மு.க- விற்கு உறுப்பினர் சேர்க்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்;ச்சியாக திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், ஓட்டப்பிடாரம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடிநிலைமுகவர்கள் BLA-2 ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இன்று (08.07.2025) மாலை 6.30 மணிக்கு ஓட்டப்பிடாரம் தொகுதி BLA-2 கூட்டம் புதுக்கோட்டை சத்யா மஹாளிலும், திருச்செந்தூர் தொகுதி 09.07.2025 அன்று காலை 9 மணிக்கு IMA ஹாலிலும், ஸ்ரீவைகுண்டம் தொகுதி நாளை (09.07.2025) காலை 10.30 மணிக்கு ஆத்தூராங்கால் மல்லிகை திருமண மண்டபத்திலும் நடைபெறும்.

தி.மு.க துணைப் பொதுச்செயலாளர், நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகின்ற இக்கூட்டங்களில் BLA-2 அந்தந்த தொகுதிகளில் உள்ள மாநில மாவட்ட நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்ட அணி அமைப்பாளர்கள் ஒன்றிய நகர பகுதி பேரூர் செயளாளர்கள் மட்டும் பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

மதுரை மாநகர் மாவட்டம் ஆரப்பாளையம் 1ம் பகுதி 58வது வட்ட கழகத்திற்கு உட்பட்ட பூங்கா நகர் 108வது பாகத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு' கழகத் தலைவர் ஆணைக்கு இணங்க உறுப்பினர் சேர்க்கும் பணியினை மாநகர் மாவட்ட கழக செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. ஆய்வு மேற்கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். உடன் மதுரை மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் மூவேந்திரன், சின்னம்மாள், பொதுக்குழு உறுப்பினர்கள் வைகை பரமன், ஆறுமுகம், பகுதி கழக செயலாளர் எஸ்.எஸ்.மாறன், வட்ட கழக செயலாளர் சீனிரமேஷ், மாவட்ட பிரதிநிதி பாண்டி, உருட்டி ரமேஷ், உதயகுமார், மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர் தெய்வகுமார், அப்பி, இளவரசன், மாரிச்சாமி, அழகர், கருப்புசாமி, ஜெயப்பாண்டி, வெள்ளிமுத்து, முருகேசன், பூலாம், முனியாண்டி, முத்துப்பாண்டி, தொழில்நுட்ப அணி, கே.பி.ரிசி, கதிரவன், செல்வி, ராஜேந்திரன், ஆ.கோகிலா, நாகஜோதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

தேனி தெற்கு மாவட்டம் கம்பம் சட்டமன்றத் தொகுதி அனுமந்தம்பட்டி பேரூராட்சி அனைத்து வார்டுகளில் நான்கு கோடி 37லட்சம் மதிப்பில் புதிய தார்ச் சாலை அமைக்கும் பணியை தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் அனுமந்தன்பட்டி பேரூராட்சி தலைவர் ராஜேந்திரன். மற்றும் வார்டு கவுன்சிலர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.